# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2018. 02. 01 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல்

**உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ள கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையைப் பங்குகளினால் வரையறுக்கப்பட்ட கம்பெனி யொன்றாக மாற்றுவதன் மூலம் கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 34.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல்

*ச. வ- ஓ. 26/2010*

**உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ள கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பங்குகளினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாக மாற்றுவதன் மூலம் கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1***. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படுவதும், (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*சட்டத்தின் குறிக்கோள்.*

***2***. இச்சட்டத்தின் குறிக்கோள், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படியான மாற்றத்தின்மூலம் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக உரிமமளிக்கப்பட்டதுமான கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை பங்குகளினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகப் பரஸ்பரமற்றமயமாக்கலாதல் வேண்டும்.

*மாற்றம் தொடர்பான நடவடிக்கை முறை.*

***3***. (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தினால் தாபிக்கப்பட்டதும், (இதனகத்துப் பின்னர்

2-PL 010619-475 (2018/01)

“ஆணைக்குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒன்பது மாதங்களினுள், கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்குவதற்காக அமைச்சருக்குப் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் உத்தேசிக்கப்பட்ட அமைப்பகவிதிகள்;

(ஆ) இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்களாக நியமிக்கப்படவேண்டிய ஆட்களின் பெயர்கள் ; அத்துடன்

(இ) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் தொடக்கப் பங்குதாரர்களினது பெயர்கள்.

(2) அமைச்சர், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களினுள், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள், (இதனகத்துப் பின்னர் “பதிவாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்குச் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைப் பங்குகளினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகப் பதிவுசெய்யும்படி பதிவாளரைப் பணித்தலும் வேண்டும்.

*பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைப் பதிவு செய்தல்.*

**4.** (1) மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் அமைச்சரின் பணிப்புரை பெறப்பட்டதன்மேல், பதிவாளர், பங்குகளினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாகக் கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை உடனடியாகப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், அப்பொருள் படுகின்ற சான்றிதழொன்றை வழங்குதலும் வேண்டும்.

(2) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை எத்தேதியன்று பதிவுசெய்யப்பட்டதோ அத்தேதி, இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில் “மாற்றல் தேதி” எனக் குறிப்பீடுசெய்யப் படுதல் வேண்டும்.

பதிவாளர், பதிவை அமைச்சருக்கு அறிவித்தல்.

**5**. (1) நான்காம் பிரிவின்கீழ் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைப் பதிவுசெய்ததன்மேல், பதிவாளர், அத்தகைய பதிவு பற்றிய நிகழ்வை எழுத்தில் அமைச்சருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழான தகவலைப் பெற்றதன் மீது, வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், மாற்றல் தேதியிலிருந்து கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை பங்குகளினால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பெனியாக மாற்றப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

வழங்கப்பட வேண்டிய பங்குகளின் குறித்தொதுக்குகை.

**6**. (1) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபையானது, பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் வழங்கப்படவேண்டிய பங்குகளின் எண்ணிக்கையையும் அத்தகைய நோக்கத்துக்காகப் பங்கு மூலதனமாக மாற்றப்படவேண்டிய ஒதுக்குகளின் பெறுமதியையும் மாற்றல் தேதியிலிருந்து ஒரு மாதகாலப்பகுதியினுள் தீர்மானித்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ள உறுப்பினர்களும் இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியமும், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் வழங்கப்படவேண்டிய பங்குகளில் முறையே அறுபது சதவீதமும் நாற்பது சதவீதமும் குறித்தொதுக்கப்படுவதற்கு இச்சட்டத்தின்கீழ் உரித்துள்ளவர்களாதலும் உரித்துடையதாதலும் வேண்டும்.

வழங்கப்பட வேண்டிய பங்குகளின் குறித்தொதுக்குகையினது கையாளுகை.

**7**. (1) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையானது, 8 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டிய பங்குகளின்மீதான வரையறுக்கமைய 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட தீர்மானத்தின்மேல் உடனடியாக பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் வழங்கப்பட வேண்டிய பங்குகளின் அதிகபட்சம் நாற்பது சதவீதத்தை உறுப்பினர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஆறாம் பிரிவின் நியதிகளின்படி உறுப்பினர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டு (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் வழங்கப்படவேண்டிய மீதிப்பங்குகளின் விற்பனை வரும்படிகளுக்கு மட்டுமே உறுப்பினர்கள் உரித்துடையோராதல் வேண்டும்.

(3) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எவரேனும் உறுப்பினர், முழுமையாக அல்லது பகுதியளவில், (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய உறுப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய பங்குகளின் தனிப்பட்ட குறித்தொதுக்குகை தொடர்பில், அத்தகைய உறுப்பினரினால் குறித்துரைக்கப்பட்டவொரு விலையிலும் தேதியிலும், பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு எழுத்தில் முகவரியிட்டனுப்பப்படும் அத்தகைய உறுப்பினரினால் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்குப் பங்குகளை வழங்கும்படி பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை அறிவுறுத்தலாம் ; அத்தேதியானது, பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் தொடக்கப் பகிரங்க முனைவை ஆணைக்குழு எத்தேதியன்று அங்கீகரிக்கின்றதோ அத்தேதிக்குப் பிந்தாதவொரு தேதியாகவிருத்தல் வேண்டும் :

ஆயின், எவரேனும் உறுப்பினர் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுவாராயின், பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையானது, உறுப்பினர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஆனால் வழங்கப்படாத பங்குகளை, பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் தொடக்கப் பகிரங்க முனைவில் வழங்குதலும் கையுதிர்த்தலும் வேண்டும்.

(4) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், உறுப்பினர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டவையும் தொடக்கப் பகிரங்க முனைவில் ஒப்பப்பணஞ் செலுத்தப்படாதவையுமான பங்குகள், இயைபான உறுப்பினர்களின் அறிவுறுத்தல்களின்மீது அத்தகைய

உறுப்பினர்களினால் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு, அத்தகைய உறுப்பினர்களினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தேதியன்றும் அத்தகைய விலையிலும் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(5) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையானது (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஏதேனும் விற்பனையின் வரும்படிகளை முறையான உறுப்பினருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(6) மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியமானது, மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் வழங்கப்பட வேண்டிய பங்குகளின் நாற்பது சதவீதம் தொடர்பில் மட்டுமே விற்பனை வரும்படிகளுக்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(7) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியமானது, 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி பகுதியளவில் அல்லது முழுமையாக பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் தொடக்கப் பகிரங்க முனைவில் அல்லது மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்தினால் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கும் அல்லது மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்தினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தேதியன்றும் அத்தகைய விலையிலும் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் வழங்கப்படவேண்டிய பங்குகளின் நாற்பது சதவீதம் தொடர்பிலான பங்குகளை வழங்கும்படி பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை அறிவுறுத்துதல் வேண்டும்.

(8) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையானது, 6 ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஏதேனும் விற்பனையின் வரும்படிகளை மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(9) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பரஸ்பர மற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை, விதித்துரைக் கப்பட்ட படிவத்தில், வழங்குகைத் தேதியிலிருந்து இருபத்தொரு வேலைநாட்களினுள் பின்வருவன தொடர்பில் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் :-

(அ) வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை ;

(ஆ) பங்குகளின் பெறுமதி ; அத்துடன்

(இ) பங்குகளின் வழங்குகையை அடுத்து கம்பெனியின் கூறப்பட்ட மூலதனத்தொகை.

தனிப்பட்ட உறுப்பினர்களுக்குப் பங்குகளைக் குறித் தொதுக்குதல்.

**8.** (1) ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினருக்கும் வழங்கப்பட வேண்டிய பங்குகள் தொடர்பில் அத்தகைய உறுப்பினருக்காக ஐந்து சதவீத அதிகபட்ச உச்சவரம்புக்கமைய நியமிக்கப்பட்ட தேதியிலி ருந்து மூன்று மாதங்களினுள் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி உறுப்பினர்களிடையே பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் வழங்கப்படவேண்டிய பங்குகளின் அறுபது சதவீதக் குறித்தொதுக்குகைபற்றி உறுப்பினர்கள் முடிபு செய்யலாம்.

(2) தனிப்பட்ட பங்குவைத்திருக்கையின் குறித்தொதுக்கை பற்றி உறுப்பினர்கள் உடன்படுவதற்குத் தவறுமிடத்து, ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினருக்கும் வழங்கப்படவேண்டிய பங்குகள் தொடர்பில் அத்தகைய உறுப்பினருக்காக ஐந்து சதவீத அதிகபட்ச உச்சவரம்புக்கமைய 6 ஆம் பிரிவுக்கிணங்க, பரஸ்பரமற்றமய மாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் உறுப்பினர்க ளுக்குக் குறித்தொதுக்கப்பட்ட பங்குகளின் சமமான விகிதாசாரத் துக்கு ஒவ்வோர் உறுப்பினரும் உரித்துடையவராதல் வேண் டும்.

**9**. உறுப்பினரொருவர், அத்தகைய உறுப்பினருக்குச் செய்யப் பட்ட பங்குகளின் குறித்தொதுக்குகையை, அத்தகைய குறித் தொதுக்குகைத் தேதியிலிருந்து இரண்டுமாதக் காலப்பகுதியினுள் கைதுறக்கலாமென்பதுடன், பங்குகளின் அத்தகைய குறித் தொதுக்குகை, பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால், பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் தொடக்கப் பகிரங்க முனைவில் வழங்கப்படுதலும் விற்பனைசெய்யப்படுதலும் வேண்டும்; அத்து டன் அத்தகைய விற்பனை வரும்படிகள் 15 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

*உறுப்பினர்களினால் கைதுறக்கப்பட்ட பங்குகளைக் கையாளுதல்.*

**10**. (1) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களாகச் சேவையாற்றுவதற்கான ஆட்களை விதந்துரைப்பதற்கு, நியமிக்கப் பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களினுள் அமைச்சர் பின்வரும் ஆட்களைக் கொண்டுள்ள பெயர்நியமனக் குழாமொன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும் :-

*பெயர்நியமனக் குழாத்தை அமைத்துருவாக்குதல்.*

(அ) 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ;

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ;

(இ) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 9 ஆம்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஈ) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பணிப் பாளர் தலைமையதிபதி ; அத்துடன்

(உ) பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு, விடயத்துக்கேற்ப, கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த் தனையின் அல்லது பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினரொருவர்.

(2) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், பெயர்நியமனக் குழாத்தின் தவிசாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி பெயர்நியமனக் குழாத்தின் செயலாளராகவிருத்தலும் வேண்டும்.

(3) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை யானது நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனியொன்றாக வரும் போது பெயர்நியமனக் குழாம் பணியாற்றாதொழிதல் வேண் டும்.

பெயர்நியமனக் குழாத்தின் கூட்டநடப்பெண்ணும் அதனால் கடைப்பிடிக்கப் பட வேண்டிய நடவடிக்கை முறையும்.

**11.** (1) பெயர்நியமனக் குழாத்தின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை யின் பணிப்பாளர்கள் சபை உறுப்பினரொருவரைப் பெயர்குறித்து நியமித்தல், மதிப்பீடுசெய்தல், தெரிவுசெய்தல் மற்றும் அத்தகைய உறுப்பினரை அகற்றுதல் என்பவற்றுக்காக மற்றவற்றுக்கிடையில் ஏற்புடையற்பாலதான நடவடிக்கைமுறை விதித்துரைக்கப்பட்ட வாறாகவிருத்தல் வேண்டும்.

(3) பெயர்நியமனக் குழாம், அத்தகைய குழாம் அமைத்துருவாக் கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள், விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க, மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக் காகப் பணிப்பாளர்கள் சபையில் சேவையாற்றுவதற்கான ஆட்களின் பெயர்களை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

*பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களினது பெயர்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுதல்.*

**12.** (1) ஆணைக்குழுவானது, பெயர்நியமனக் குழாத்தின் விதப்புரைகளைப் பெற்றுக்கொண்டதன் மீது, தெரிவுக்கான கட்டளைக்கற்களைக் கவனத்துட்கொண்டு பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபைக்கான ஆட்களின் நியமனத்துக்காக அங்கீகாரம் வழங்கலாம்.

(2) குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக ஆணைக்குழு அங்கீகாரம் வழங்க மறுக்குமிடத்து, பெயர்நியமனக் குழாத்துக்கு அத்தகைய காரணங்களை அது அறிவித்தல் வேண்டும்.

*எந்தச் சந்தர்ப்பங்களில் பெயர்நியமனக் குழாம் மீளக் கூட்டப்பட வேண்டுமோ அந்தச் சந்தர்ப்பங்கள்.*

**13.** அமைச்சர், பின்வரும் பட்சத்தில், பெயர்நியமனக் குழாத்தை மீளக்கூட்டுதல் வேண்டும் :-

(அ) பணிப்பாளரொருவரின் பதவிக்காலம் முடிவுறுவதன் முன்னர் இறப்பின்மூலம், பதவி விலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் அவர் பதவியை வறிதாக்கும்பட்சத்தில் அல்லது ஆணைக்குழுவானது அங்கீகாரம் வழங்க மறுக்குமிடத்து, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான ஆளொருவரை விதந்துரைப்பதற்கெனவும்; அல்லது

(ஆ) பணிப்பாளர்கள் சபையின் பதவிக்காலம் முடிவுறுகையில் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை நிரற்படுத்தப்படாதுள்ள பட்சத்தில், ஒவ்வொரு பதவிக்காலம் தொடர்பிலும் மூன்றாண்டுகளை விஞ்சாத மேலதிகக் காலப்பகுதிக்காகப் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபையை மீள அமைத்துருவாக்குவதற்கெனவும்.

*பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபை.*

**14.** (1) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபை, மாற்றல் தேதியன்று பதவிவகிக்காதொழிதல் வேண்டும்.

(2) பன்னிரெண்டாம் பிரிவின் நியதிகளின்படி பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபையில் சேவையாற்றுவதற்குப் பெயர்நியமனக்

குழாத்தின் விதப்புரையின்மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட ஆட்கள், மாற்றல் தேதியிலிருந்து நியமிக்கப்பட்டுள் ளோராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆட்கள் அத்தகைய தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தலும் வேண்டும்; அத்துடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையோராதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பரஸ்பரமற்ற மயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப் பாளர்கள் சபை உறுப்பினர்கள் -

(அ) பங்குத் தரகர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மூன்றுக்கு மேற்படாத ஆட்களையும் ; அத்துடன்

(ஆ) சுயாதீனமான பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்ட நான்குக்குக் குறையாத ஆட்களையும்,

கொண்ட ஏழு ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த் தனையின் பணிப்பாளர்கள் சபையின் தவிசாளர், சுயாதீனமான பணிப்பாளர்களுளிருந்து பணிப்பாளர்கள் சபையினால் தேர்ந் தெடுக்கப்படுதல் வேண்டும்.

*மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்.*

**15**. (1) ஆணைக்குழுவானது, பொதுமக்களின் அக்கறையை முன்னெடுத்துச்செல்வதற்கு, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்தைத் தாபித் தல் வேண்டும்.

(2) மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியம், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கம்பெனியின் உறுப்பினர்கள், விடயத்துக்கேற்ப, கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக அல்லது பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக மற்றும் ஆணைக்குழுவாக இருத்தலும் வேண் டும்.

(3) மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியமானது, பின்வருவனவற்றினூடாகப் பொதுமக்களின் அக்கறையை முன்னெடுத்துச்செல்லும் நோக்கங்களுக்காக, 7 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளின் நியதிகளின் படி அதற்கு அனுப்பிவைக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்:-

(அ) இலங்கையின் மூலதனச் சந்தையை அபிவிருத்திசெய்தல்;

(ஆ) முதலீட்டாளருக்கு அறிவுபுகட்டுதலை ஊக்குவித்தல்;

(இ) மூலதனச் சந்தை உட்கட்டமைப்பை மேம்படுத்தல்; அத்துடன்

(ஈ) மூலதனச் சந்தையில் முதலீட்டாளரின் அணுக்கத்தையும் பங்குபற்றுகையையும் மேம்படுத்தல்;

(4) இரண்டாம் உட்பிரிவின் நியதிகளின்படி கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியின் பணிப்பாளர்கள் சபையானது :-

(அ) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பிரதான நிறைவேற்றலுவலராகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் தவிசாளரினது ஒருப்பாட்டுடன் ஆணைக்குழுவின் தவிசாளரினது நியமத்தராகவிருத்தல் வேண்டும்;

*பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை நிரற்படுத்துதல்.*

**16.** பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர்கள் சபையானது, ஆணைக்குழுவினால் எழுத்தில் வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டாலொழிய மாற்றல் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியினுள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை அதன் சொந்தப் பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

*பகிர்ந்தளிப்புகளும் மேலதிக வழங்குகைகளும் நிரற்படுத்தலின் முன்னர் செய்யப்படுதலாகாது.*

**17.** (1) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையானது, பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் நிரற்படுத்துதலுக்கு முன்னர் அதன் பங்குதாரர்களுக்குப் பங்கிலாபக் கொடுப்பனவொன்றை அல்லது பங்குகளின் மேலதிக வழங்குகையொன்றைச் செய்தலாகாது.

(2) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நிரற்படுத்துதலின் பின்னர் பங்கிலாபங்களின் கொடுப்பனவினது அல்லது பங்குகளின் மேலதிக வழங்குகையினது விளைவாகப் பங்குதாரர்களுக்குத் திரளுகின்ற வாக்களிக்கும் உரிமைகள் தவிர்ந்த வேறு ஏதேனும் நன்மை, 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி குறித்தொதுக்கப்பட்டவையும் வழங்கப்படாதவையுமான பங்குகள் தொடர்பில் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால், விடயத்துக்கேற்ப, செலுத்தப்படுதல் அல்லது குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(3) பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையானது, நிரற்படுத்துதலுக்கு முன்னர் தொழிலின் சாதாரண நெறியின்போது தவிர அல்லது ஆணைக்குழுவினால் வேறுவகையாக அங்கீகரிக்கப்பட்டவாறு தவிர, கடன்கொடுத்தலோ அல்லது கடன்பெறுதலோ ஆகாது.

*பரஸ்பரமற்றமயமாக்கப்பட்டதன்மேல் நிரற்படுத்தப்பட்ட கம்பெனிகளினதும் துணைநிலைக் கம்பெனிகளினதும் அந்தஸ்து.*

**18.** பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை பதிவுசெய்யப்பட்டதன்மேல் -

(அ) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்டதும் கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்பட்டதுமான ஒவ்வொரு கம்பெனியும், பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்மீது நிரற்படுத்தப்பட்ட கம்பெனியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் ஒவ்வொரு துணைநிலைக்கம்பெனியும்பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் துணைநிலைக் கம்பெனியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

**19.** ஆணைக்குழுவினால் விதிக்கப்படக்கூடியவாறான எவையேனும் நியதிகளுக்கும் அல்லது நிபந்தனைகளுக்கும் அமைய, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றாகப் பணியாற்றுவதற்கு உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட உரிமம், மாற்றல் தேதியிலிருந்து அத்தகைய உரிமம் முடிவுறும்வரை பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றாகப் பணியாற்றுவதற்குப் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட உரிமம், பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றாகக் கருதப்படுதல்.

**20.** மாற்றல் தேதியன்று உள்ளவாறு உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் எல்லா ஆதன உரிமைகளும், அக்கறைகளும், பொறுப்புக்களும், பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் ஆதன உரிமைகளாகவும், அக்கறைகளாகவும், பொறுப்புகளாகவும் இருத்தல் வேண்டும்.

ஆதன உரிமைகளையும் பொறுப்புக் களையும் கைமாற்றுதல்.

**21.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

ஒழுங்குவிதிகள்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

பேணல்கள்.

**22.** (1) மாற்றல் தேதிக்கு முற்போந்த நாளன்றுள்ளவையும், கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்டவையுமான எல்லா ஒப்பந்தங் களும் உடன்படிக்கைகளும் அல்லது அதனால் அல்லது அதனுடன் கையொப்பமிடப்பட்டதும் அல்லது வழங்கப்பட்டதுமான ஏதேனும் ஆவணமும், மாற்றல் தேதியிலிருந்து, பரஸ்பரமற்றமய மாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் அல்லது அதனால் அல்லது அதனுடன் கையொப்பமிடப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஆவணங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், மாற்றல் தேதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும்,வழக்குநடவடிக்கைகளும் அல்லது குற்றவழக்கு களும், மாற்றல் தேதியிலிருந்து, விடயத்துக்கேற்ப, பரஸ்பர மற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும்,வழக்கு நடவடிக்கைகளாகவும் அல்லது குற்றவழக்குகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம்.

(3) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது வழக்குநடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாய சபையினால் பதியப்பட்டவையும் அல்லது அளிக்கப்பட்டவையும், மாற்றல் தேதிக்கு முற்போந்த நாளன்று திருப்தி செய்யப்படா துள்ளவையுமான எல்லாத் தீர்வைகளும் அளிப்புக்களும், மாற்றல் தேதியிலிருந்து, விடயத்துக்கேற்ப, பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்காக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட தீர்வைகளாக அல்லது அளிப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற் கிணங்க வலுவுறுத்தவும்படலாம்.

(4) மாற்றல் தேதிக்கு முற்போந்த நாளன்று உள்ளவையும், கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் எவரேனு மாளுக்கு அல்லது நிறுவனத்துக்கு வழங்கப்பட்டவையுமான எல்லா ஆவணங்களும், வழிகாட்டுநெறிகளும், விதிகளும் மாற்றல் தேதியிலிருந்து பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையினால் வழங்கப்பட்ட ஆவணங்களாகவும், வழிகாட்டு நெறிகளாகவும், விதிகளாகவும் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், அதற்கிணங்க அந்தந்த ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்.

(5) மாற்றல் தேதிக்கு முற்போந்த நாளன்று உள்ளவையும் ஆணைக்குழுவினால் கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்த னைக்கு வழங்கப்பட்டவையுமான எல்லா ஆவணங்களும், பணிப்புரைகளும், விதிகளும், மாற்றல் தேதியிலிருந்து ஆணைக் குழுவினால் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைக்கு வழங்கப்பட்ட ஆவணங்களாகவும், பணிப்புரை களாகவும், விதிகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(6) மாற்றல் தேதிக்கு முற்போந்த நாளன்று உள்ளனவான கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் எல்லாச் சொத்துக்களும், பொறுப்புக்களும், மாற்றல் தேதியிலிருந்து பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் சொத்துக்களாகவும் பொறுப்புக்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(7) மாற்றல் தேதிக்கு முற்போந்த நாளன்று கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட பணியாட்டொகுதியின் எல்லா அலுவலர்களும் வேறு உறுப்பினர்களும், மாற்றல் தேதிக்கு முற்போந்த நாளன்று அவர்களுக்கு ஏற்புடையற்பாலனவாகவிருந்த நியதிநிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறைந்தவையாகவிராத அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது மாற்றல் தேதியிலிருந்து பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையினால் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை உறுப்பினர்களுக்கும் வியாபார உறுப்பினர்களுக்கும் உரித்தாக்கப்பட்ட அதன் வசதிகளுக்கான எல்லா அணுக்க உரிமைகளும் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின்கீழ் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

பொருள் கோடல்.

**23.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"பங்குகளினால் வரையறுக்கப்பட்ட கம்பெனி" என்பது, 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு தனியார் கம்பெனி தவிர்ந்த பொறுப்பு வரையறுக்கப்பட்டவொரு கம்பெனி என்று பொருளாகும்;

"உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஓர் உத்தரவாதக் கம்பெனியாகக் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனி என்று பொருளாகும்;

கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை" என்பது, 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்டதுமான கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை என்று பொருளாகும்;

“பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை” என்பது, 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் பதிவுசெய்யப்பட்டதும் பங்குகளினால் வரையறுக்கப் பட்டதுமான கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை என்று பொருளாகும்;

“சுயாதீனமான பணிப்பாளர்” என்பது, கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையின் உறுப்பினரொருவருடன் அல்லது வியாபார உறுப்பினருடன் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் சம்பந்தப்பட்டுள்ள ஆளொருவர் தவிர்ந்த ஆள் அல்லது ஒரு சுயாதீனமான பணிப்பாளரின் பொறுப்பை நிறைவேற்றுகையில் அத்தகைய பணிப்பாளரின் சுயாதீனமான கருத்தின் பிரயோகத்துடன் முக்கியமானவகையில் தலையிடக்கூடிய தொடர்புமுறையை அல்லது சூழ்நிலையைக் கொண்டுள்ள வேறெவரேனுமாள் என்று பொருளாகும்;

“நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பெனி” என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அதேபொருளையுடையது;

“உறுப்பினர்” என்பது, வாக்களிக்கும் உரிமைகளைக் கொண்டுள்ள கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் உறுப்பினரொருவர் என்று பொருளாகும்;

“அமைச்சர்” என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்குதல் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

“ஆதனம்” என்பது, ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் என்று பொருளாவதுடன், பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) ஒப்புரவானதாயினுஞ்சரி அல்லது சட்டப் படியானதாயினுஞ்சரி, ஏதேனும் அக்கறை, வசதியுரிமை அல்லது உரிமை, தற்போதைய தாயினுஞ்சரி அல்லது எதிர்காலத்தின தாயினுஞ்சரி, உரித்தாக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது எதிர்பாராததாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகப் பெறுமதி கொண்டதாக விருப்பினுஞ்சரி, ஏதேனும் உரித்து, உரிமைக் கோரிக்கை, வழக்குரிமைப் பொருள், தத்துவம் அல்லது சிறப்புரிமை;

(ஆ) உடைமை மாற்றத்தை எழுதி நிறைவேற்றும் ஆள், ஒன்றில் முழு அக்கறைக்கான அல்லது ஏதேனும் பகுதியளவிலான அக்கறைக்கான எதிர்பாராத உரிமையைக் கொண்டுள்ள அல்லது அதற் குரித்துள்ள உரிமையாளராகவுள்ள ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை உடைமைமாற்றுதல், சாட்டுதல் செய்தல், நியமித்தல், ஒப்படைத்தல் அல்லது வேறுவகையாகக் கைமாற்றுதல் அல்லது கையுதிர்த்தல் என்பவற்றுக்காக எழுதி நிறைவேற்றப்பட்ட ஏதேனும் உடைமை மாற்றம்;

(இ) ஏதேனும் வங்கிப்பத்திரம், கொண்டுவருநர் பத்திரம், திறைசேரி உண்டியல், பங்கிலாப ஆணைப்பத்திரம், நாணயமாற்றுண்டியல், வாக்குறுதிப்பத்திரம், காசோலை மற்றும் கைமாற்றத்தகு வைப்புச் சான்றிதழ் என்பன உட்பட, ஏதேனும் கைமாற்றத்தகு சாதனம்;

(ஈ) சட்டப்படியானதாயினுஞ்சரி அல்லது ஒப்புர வானதாயினுஞ்சரி ஏதேனும் ஈடு அல்லது பொறுப்பு, உள்ளபடியானதாயினுஞ்சரி அல்லது கொள்நிலையானதாயினுஞ்சரி ஏதேனும் உத்தரவாதம், சோந்தை அல்லது அடைமானம், தற்போதையதாயினுஞ்சரி அல் லது எதிர்காலத்தினதாயினுஞ்சரி, உரித்தாக்

கப்பட்டதாயினுஞ்சரி அல்லது எதிர்பாராத தாயினுஞ்சரி, ஏதேனும் அடைமானக் கடிதம் அல்லது நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு, நட்டோத்தரவாதம், பொறுப்பேற்பு அல்லது ஒரு தனிசின் அல்லது பொறுப்பின் கொடுப்பனவை அல்லது பொறுப்புவிடுவிப்பைப் பெறுவதற்கான வேறு வழிவகைகள்;

(உ) பிணையங்கள் மற்றும் வேறேதேனும் அருவ அல்லது உருவ ஆதனம்;

"கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி அல்லது கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியின் கடமையை அச்சட்டத்தின்கீழ் புரிகின்ற வேறெவரேனும் அலுவலர் என்று பொருளாகும்;

"ஒதுக்குகள்" என்பது, கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் ஒன்றுதிரண்ட நிதியத்தையும் வைத்திருக்கப்பட்ட உழைப்புக்களையும் உள்ளடக்கும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**24.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.